சட்டத்தமிழ்.



## தொகுதி - 1 செம்மொழி தமிழ்

**அ). தமிழ்மொழியின் முக்கியத்துவம்** - தமிழ்மொழியின் அழகியல் பரிமாணம் - சொல்லதிகாரத்தின் வளமை.

**ஆ). செம்மொழி:** தொன்மை, இலக்கியத்தின் உயிர்ப்பு தன்மை - சம்ஸ்க்ருதம் மற்றும் ஆங்கிலம் போன்ற மொழிகளோடு தமிழ் மொழியின் ஒப்பீடு -"செம்மொழி" என்ற வார்த்தையின் பொருள் மற்றும் முக்கியத்துவம் - தமிழ் மொழியின் செம்மொழித்தன்மை மற்றும் அதன் உலகளாவிய அங்கீகாரம்

**இ). தமிழ்மொழியின் வரலாற்றுப் பின்னணி**- 2500 ஆண்டுகளுக்கு மேல் உயிர்ப்புடன் இருக்கும் மொழி - சர்வதேச அளவில் தமிழ் மொழியின் தாக்கம்: உலகளவில் தமிழ்மொழியின் சான்று: தமிழ் மொழியின் உயிர்ப்புக்கு காரணங்கள் - தொன்மையான இலக்கிய வளம் கொண்ட மொழி

**ஈ). தமிழின் தொன்மைக்கான சான்றுகள்** - கல்வெட்டுகள், நடுகற்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், பழங்கால நாணயங்கள், இலச்சினைகள், மட்பாண்டங்கள், சில்லுகள்.

**உ). தமிழின் வளமைக்கானச் சான்றுகள்** - தொல்காப்பியம், திருக்குறள், ஐம்பெருங்காப்பியங்கள், பதினென்கீழ்க்கணக்கு நூல்கள், புறநானூறு, அகநானூறு

**பார்வை: இணைப்பு** - 1

## தொகுதி - 2 தமிழ் ஆட்சிமொழி

**அ). சட்டசபையில் தமிழ் ஆட்சிமொழி:** வரலாற்றுச் சாதனை - தமிழ்நாட்டின் அடையாளம்: சட்டசபைத் தீர்மானம் - தமிழ் மொழி வளர்ச்சிக்கான அரசின் நடவடிக்கைகள் - சட்டசபைத் தீர்மானத்தின் நடைமுறை நன்மைகள்.

**ஆ). அரசு அலுவல் மொழியாக தமிழ்:** முக்கியத்துவம், நிர்வாக செயல்திறன் மற்றும் வாய்ப்புகள் - நிலைமை மற்றும் வளர்ச்சி (ஒரு பார்வை) - வரலாறு மற்றும் எதிர்காலம்.

**இ). மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ்:** ஒரு வரலாற்றுச் மேற்பார்வை - நீதி நிர்வாகத்தில் தமிழ் மொழியின் பங்கு: மக்களின் குரல்.



**ஈ). நீதித்துறையில் தமிழ் மொழியின் உயர்வு** - தமிழ் மொழிக்கு அங்கீகாரம்: தமிழ் மொழியில் உச்சநீதிமன்ற தீர்ப்புகள்- நீதித்துறையில் புரட்சி: மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பு செயல்முறை.

**பார்வை: இணைப்பு** - 2

## தொகுதி - 3 சட்டமும் அறமும் தமிழும்

**அ). தமிழ் இலக்கியத்தின் நான்கு தூண்கள்:** அறம், பொருள், இன்பம், வீடு - அறத்தின் முக்கியத்துவம்: தமிழ் இலக்கியத்தின் முக்கிய நோக்கம் - வாழ்வின் நான்கு நோக்கங்களுக்கான வழிகாட்டி

**ஆ). புறநானூறு** - வீரத்திற்கு இணையான அறத்தின் உயர்வு - அறம் பற்றிய பாடல்கள் - ஒரு பார்வை - தொல்குடித் தமிழரின் வாழ்வியலில் அறத்தின் இன்றியமையாமை - நன்னெறிப் பண்பாடு - புறநானூற்றுச் சான்றுகள்.

**இ). சட்டமும் இலக்கியமும்** - நீதியின் பரிமாணங்கள் - மனித இயல்பு, சமூகம் மற்றும் சட்டம்: இலக்கியங்களின் பார்வை - சங்க இலக்கியங்களில் சமூக நீதி - இலக்கியங்கள் வழியாகப் பார்க்கும் நீதிமுறையின் வளர்ச்சி

**ஈ). அறம் கூறும் சபை** - அறத்தின் அழைப்பு - நன்னெறிகளின் விதைப்பு - சமூக மாற்றத்தின் தொடக்கம் - சிந்தனையின் வெளிச்சம் - ஒற்றுமையின் குரல்.

**உ). மனுநீதிச் சோழனின் நீதி:** நீதியின் உயரம் - மனிதனும் விலங்குகளும் சமம் - பசுவின் கன்றைக் கொன்ற இளவரசன்/ மணி அடித்து நியாயம் கோருதல் - தபால் அட்டை கூட நீதிப் பேராணையாக ஏற்றுக்கொண்ட நவீன நீதி முறை

**ஊ). மூன்று இரத்தின கதை:** சாட்சியம் - வாய்மொழிச் சான்று - ஆவணச்சான்று - மூன்றாம் தரப்புச் சான்று.

**பார்வை: இணைப்பு** - 3 [illegible]

## தொகுதி - 4. திருக்குறள் காட்டும் அறநெறி, நீதி மற்றும் நிர்வாகம்

அ). திருக்குறள் - திருக்குறளின் அழகியல் - வாழ்வியலின் வழிகாட்டி - சமூக பண்புகள் - ஒழுக்கம், நேர்மை, நீதியின் உறைவிடம் - சமூக பண்பாடு பற்றி திருக்குறளின் பயன்பாடு - குறள் காட்டும் நீதிமுறை - "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"

ஆ). அறத்தின் உயர்வு:

- **வினைத்தூய்மை** - குறள் 656:
  ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
  சான்றோர் பழிக்கும் வினை.
- **நடுவு நிலைமை** - குறள் 118:
  சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
  கோடாமை சான்றோர்க் கணி.
- **குற்றங்கடிதல்** -
  - குறள் 433:
    தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
    கொள்வர் பழிநாணு வார்.
  - குறள் 436:
    தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
    என்குற்ற மாகும் இறைக்கு.
- **வாய்மை** - குறள் 293:
  தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
  தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
- **செங்கோன்மை** - குறள் 549
  குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
  வடுவன்று வேந்தன் தொழில்.

பயிற்சி : சட்டம் சார்ந்த இதர திருக்குறள் விளக்கங்கள்

**பார்வை: இணைப்பு - 4**



## தொகுதி V முக்கியமான சட்டச் சொற்கள் அதன் விளக்கம்

பயிற்சி: மொழிபெயர்ப்பு

- தமிழிலிருந்து ஆங்கிலம்
- ஆங்கிலத்திலிருந்து தமிழ்

**பார்வை: இணைப்பு - 5**

## தொகுதி VI. மனுக்களைத் தமிழில் எழுதுதல்

- நீதிப்பேராணை மனுக்களின் மாதிரி
- அசல் வரையறை தொடர்பான மனுக்களின் மாதிரி
  அ). உரிமையியல் சட்டம்
  ஆ). குற்றவியல் சட்டம்
- மேல்முறையீட்டு மனுக்களின் மாதிரி
  அ). உரிமையியல்
  ஆ). குற்றவியல்
  இ). நீதிப்பேராணை

**பார்வை: இணைப்பு - 6**

# II. செம்மொழி வரலாறு

## செம்மொழித் தமிழ்

### தகுதி–வரையறை–விளக்கம்

இணைப்பு - 1

#### தமிழ்மொழி

ஒரு மொழி செம்மொழித் தகுதியை, உயர்வை அடைய சில தகுதிப்பாடுகள், மொழியியல் வல்லுநர்களால் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை: 1. தொன்மை 2. தனித்தன்மை 3. பொதுமைப் பண்பு 4. நடுநிலைமை 5. கிளைமொழிகளின் தாய் 6. பட்டறிவு இலக்கியங்கள் 7. பிறமொழித் தன்மை 8. சமயச் சார்பு 9. உயர் சிந்தனை 10. கலை 11. மொழிக்கோட்பாடுகள் என்பனவாகும்.

இந்தப் பதினொரு தகுதிகளும் முற்றிலும் பொருந்தக் கூடிய ஒரே மொழியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது. அதாவது

1. மனித நாகரிகம் தோன்றிய பகுதியில் முதலில் தோன்றிய தொன்மை.
2. 2500 ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணமும் அதற்கு முன்னர்ப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இலக்கியமும் தோன்றிய மொழி.
3. மனித வாழ்வைச் சாதி மதங்கொண்டு பிரிக்காமல் அகம் புறமெனப் பிரித்த பொதுமை.
4. குறிப்பிட்ட எப்பிரிவினையும் சாராமல், தமிழ், தமிழர் என்று கூட வேறுபாடுகள் இல்லாத் திருக்குறளின் நடுநிலைமை மற்றும் உலகப் பொதுமை.
5. தென்மொழிகளுக்கு மட்டுமின்றி, பிராகூயி போன்ற வடமொழிகளுக்கும் தாய்மொழி எனும் தலைமை.



பிறமொழிகளில் கற்பனைப் படைப்புகளே இருக்க, தமிழிலோ மனிதர்களே இலக்கியங்களில் வாழ்கின்றனர். அவர்தம் அனுபவங்களே பேசப்பட்டுள்ளன.

பழம்பெரும் இலக்கியங்களில் பிறமொழித் தாக்கம் இருந்ததில்லை.

சங்க இலக்கியத்தின் சமயச் சார்பில்லாத தன்மை.

உலகினைப் பொதுத்தன்மையில் பார்க்கும் தனித்தன்மை பொருந்திய உயர்சிந்தனை.

10. இயல், இசை, நாடகம் எனும் பிரிவும், குடிமக்களையும் காப்பிய நாயகர்களாக்கிய உயர்வும் உள்ளமை.
11. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றிய இலக்கியங்களிலிருந்தும், தமிழ்மொழி வழக்குகளிலிருந்தும் கோட்பாடுகளை வகுத்துத் தொல்காப்பியம் இயற்றப்பட்டமை.

எனச் செம்மொழித் தகுதிகளனைத்தும் பொருந்தி அமைந்திருப்பதால், தமிழ்ச் செம்மொழி ஆயிற்று.

#### வாழும் தமிழ்ச்செம்மொழி

தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரீக் போன்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மொழிகளில் பிறமொழிகள் எல்லாம் அறிஞர்களால் மட்டுமே பேசப்படும் மொழிகளாக இருக்கத் தமிழ் மட்டும் இன்னும் மக்கள் பேசும் மொழியாகவும் எழுத்து மொழியாகவும் இருப்பதைக் காண முடிகின்றது. பிறமொழிகளை அறிஞர்கள் உயிரூட்டும் முயற்சியில் இருக்கையில் தமிழ் உயிர்ப்புள்ள மொழியாக உள்ளது. இத்தகைய தனித்தன்மைகளைத் தமிழ்மொழி பெற்றுள்ளது.

தொல்காப்பியம் தோன்றி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. இன்றும் அந்த இலக்கண நூலைப் படித்துப் புரிந்துகொள்ள முடிகிறது. திருக்குறள், சங்க இலக்கியங்கள் போன்ற அனைத்துமே இன்றும் படித்துணரத்

தக்கனவாக உள்ளன. மாற்றமில்லாததாய் இன்றும் புரிந்து கொள்ளும் தன்மையில் உள்ளதாய் அமைந்துள்ள மொழி தமிழ் மட்டுமே.

இந்திய மொழிகளில் தமிழ் மட்டும்தான் நாற்பது நாடுகளில் பேசப்படும் மொழியாக உள்ளது. தமிழகத்தில் ஆட்சிமொழியாய் இருப்பதுபோல் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என்ற மூன்று நாடுகளிலும் ஆட்சி மொழியாகத் திகழ்கிறது. உலக நாடுகளில் இன்று மென்பொருள் கணினித் துறைகளில் தமிழர்கள்தாம் அதிகமாகப் பங்காற்றி வருகின்றனர். இன்றுள்ள வலைத்தளங்களில் தமிழுக்கான வலைத்தளங்களே மிகுதியாக உள்ளன. இந்திய மொழிகளில் தமிழுக்கு மட்டுமே மென்பொருள்கள் போன்ற கணினிக் கருவிகள் முதன்முதலாக மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

## தமிழின் தொன்மை

தமிழைச் செம்மொழியாக மத்திய அரசு அறிவித்திருப்பது தமிழ் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தமிழ், ஈராயிரம் ஆண்டுகளாகவே ஒரு செம்மொழியாகத் திகழ்ந்துள்ளது. இதைத் தமிழறிஞர்கள் மட்டுமின்றித் தமிழை விரும்பிக் கற்ற உலக அறிஞர்கள் பலரும் பல்முறை எடுத்துக்காட்டியுள்ளனர்.

ஒரு செம்மொழிக்கு இரு தகுதிகள் கட்டாயமாக இருக்க வேண்டும். இலக்கிய வளமும் தொன்மையுமே அவ்விரு தகுதிகளாகும். இவற்றில் ஏதாவது ஒரு தகுதியை மட்டும் பெற்றிருந்தால், அந்த மொழி செம்மொழியெனக் கருதப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வசிக்கும் பழங்குடி மக்கள் பேசிவரும் 'முண்டா' மொழி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. ஆயினும், இந்த மொழிக்கு இலக்கிய வளம் கிடையாது. எழுத்துகள் கூட இல்லை. ஆகையால், முண்டா மொழி செம்மொழி என்ற தகுதியைப் பெறவில்லை. இன்னொரு பக்கம் ஆங்கில மொழி, நிரம்பிய இலக்கிய வளம்பெற்ற மொழியாகத் திகழ்கின்றது. ஆயினும், இம்மொழியின் தொன்மை ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேலே இல்லை.





எனவேதான், ஆங்கிலேயரும் தம் மொழியைச் செம்மொழி எனக் கூறிக்கொள்வதில்லை.

இந்திய நாட்டில் இலக்கிய வளமும் தொன்மையும் உள்ள மொழிகள் சமஸ்கிருதம் தமிழ் ஆகிய இருமொழிகள் மட்டுமே. எனவேதான், மத்திய அரசு முதன்முதலில் இவ்விரு மொழிகளைச் செம்மொழிகள் என ஏற்பளித்தது. இவ்விரு மொழிகளுள் திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்த தமிழ், இந்தியாவின் மிகத்தொன்மையான முதல் செம்மொழி என்ற பெருமைக்கு உரித்தாகிறது.

தமிழ் இலக்கியத்திலேயே அதன் தொன்மைக்குப் பல சான்றுகள் இருப்பன உண்மைதான். ஆயினும் தமிழின் தொன்மையை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிலைநாட்ட இலக்கியங்கள் மட்டும் போதா. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களின் காலக் கணிப்பைப் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. கல்வெட்டுகளும் பழைய காசுகளும் இலச்சினைகளும் எழுத்துப் பொறித்த மண்பாண்டச் சில்லுகளும் தமிழின் தொன்மைக்கு நேரடியான புறச்சான்றுகளாகத் திகழ்கின்றன.

## பழந்தமிழ் எழுத்துகள்

பிராமி எழுத்துகளால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் முக்கியமாக மதுரையைச் சுற்றியும் உள்ள பகுதிகளில் இயற்கையான குகைகளில் காணப்படுகின்றன. இவ்வெழுத்துகள் அசோக மன்னரின் புகழ்பெற்ற கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகளைப் பெரும்பாலும் ஒத்திருப்பதால் தமிழ்நாட்டுக் குகைக் கல்வெட்டுகளின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 2ஆம் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. பிராகிருத மொழிகளுக்கான மௌரிய காலத்துப் பிராமி எழுத்துகளைக் கூட்டியும் குறைத்தும், வேறு பல மாற்றங்களைப் புகுத்தியும் தமிழை எழுதுவதற்கு ஏற்றத் தமிழ்ப் பிராமி எழுத்து முறை உருவாக்கப்பட்டது. இந்த எழுத்துகளே குகைக் கல்வெட்டுகளிலும் காசுகளிலும் இலச்சினைகளிலும் சில்லு

களிலும் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவையே சங்க காலத் தமிழ் எழுத்துகள் ஆகும்.

### கல்வெட்டுகள்

குகைக் கல்வெட்டுகளில் மிகவும் முக்கியமானவை மூன்று:- அழகர், மாங்குளத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனும் (கி.மு. 2ஆம் நூற்றாண்டு), ஜம்பையில் அதியன் நெடுமான் அஞ்சியும் (கி.பி. முதல் நூற்றாண்டு), புகளூரில் சேரல் இரும்பொறையும் (கி.பி. 2ஆம் நூற்றாண்டு) வெட்டிவைத்த கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டுகளின் எழுத்தமைதியைக்கொண்டு இவை சங்க காலத்தைச் சார்ந்தவை என்று உறுதியாகக் கூறலாம்.

### நடுகற்கள்

அண்மையில் வைகைக் கரையில் புலிமான்கோம்பை என்ற ஊரில் மூன்று நடுகற்களும், தாதப்பட்டி என்ற ஊரில் ஒரு நடுகல்லும் கிடைத்துள்ளன. இவை பெருங்கற்காலச் சின்னங்களாகும். இவற்றில் தமிழ் பிராமி எழுத்துகளில் தமிழ் மொழியில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்தமைதியிலிருந்து இவற்றின் காலத்தை கி.மு. 21ஆம் நூற்றாண்டு எனக் கணிக்கலாம். புலிமான் கோம்பையில் உள்ள ஒரு நடுகல்லில் தொல்காப்பியம் கூறும் 'ஆகோள்' என்ற சொல் காணப்படுகிறது. சங்க நூல்களில் நடுகற்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளை இந்நடுகற்கள் உறுதி செய்கின்றன. ஆகையால், இக்கல்வெட்டுகள் மிகவும் சிறப்பான கண்டுபிடிப்புகளாகக் கருதப்படுகின்றன.

### காசுகள்

பாண்டியன் பெருவழுதியின் பெயர் பொறித்த செப்புக் காசு, அதன் எழுத்தமைதியிலிருந்து கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது. கி.பி. முதல் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட இரும்பொறை என்ற பெயர் பொறித்த செப்புக் காசுகள் கரூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதற்குப் பிற்காலத்திய சேர மன்னர்களான மாக்கோதை, குட்டுவன் கோதை ஆகியோரின் பெயர்கள் பொறித்த வெள்ளிக் காசுகளும் கிடைத்துள்ளன.





சங்ககாலத் தமிழர்கள் பொன், வெள்ளி, செம்பு உலோகங்களால் ஆக்கிய இலச்சினைகளையும் மோதிரங்களையும் பயன்படுத்தினர். அண்மைக்காலத்தில் கரூரில் அமராவதி ஆற்றுப்படுகையில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பொறித்த பல இலச்சினைகளும் மோதிரங்களும் சங்க காலத்தைச் சார்ந்தவைகளாகத் திகழ்கின்றன.

### சில்லுகள்

தமிழகமெங்கும் நடைபெற்றுவரும் அகழ்வாய்வுகளில் நூற்றுக்கணக்கான எழுத்துப் பொறித்த சில்லுகள் கிடைத்து வருகின்றன. இவற்றைத் தொல்லியல் முறைப்படி ஆய்வு செய்த அறிஞர்கள் இவற்றின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை என்று கணித்துள்ளனர். ஆயினும் வரலாற்று அறிஞர்கள் இதுவரை இச்சில்லுகள் காட்டும் முக்கியமான ஒரு கருத்தைப்பற்றிக் கவனம் செலுத்தவில்லை. எழுத்துப் பொறித்த சில்லுகள் தமிழகமெங்கும் சின்னஞ்சிறிய கிராமங்களில் அகழ்வாய்வு செய்யும்போது கிடைத்து வருகின்றன. இந்திய நாட்டிலேயே தமிழகத்தில்தான் எழுத்துப் பொறித்த சில்லுகள் மிக அதிகளவில் கிடைத்துள்ளன. எளிய மக்கள் தங்கள் வீடுகளில் புழங்கிய சட்டி, பானைகளின் மீது கையில் கிடைத்த இரும்பாணியைக்கொண்டு தங்கள் பெயர்களைக் கீறியுள்ளனர். சங்க காலத்தில் தமிழகத்தில் எழுத்தறிவு பரவலாக இருந்துள்ளது என்பதற்கு இச்சில்லுகள் மிக முக்கியமான புறச்சான்றுகளாய் உள்ளன.

### வெளிநாடுகளில்

தமிழர்கள் சங்க காலத்திற்கு முன்னரே மேலை நாடுகளுடனும் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர் என்று சங்கப் பாடல்கள் மூலமாகவும், தமிழகத்தில் அதிகமாகக் கிடைக்கும் ரோமானிய நாணயங்களிலிருந்தும் தெரியவந்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துகள் பொறித்த சில்லுகள், எகிப்து நாட்டில் செங்கடல் கரையில் உள்ள துறைமுகங்களிலிருந்தும், தாய்லாந்து நாட்டில் அகழ்வு ஆய்வுகளிலும் கிடைத்துள்ளன. இவை தமிழரின் வெளிநாட்டு வாணிபத்தை உறுதி செய்கின்றன. தமிழ்

மொழியில் பொறிக்கப்பட்டுள்ள இச்சில்லுகளின் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தமிழின் தொன்மைக்கும் செம்மொழி என்ற தகுதிக்கும் இரு தூண்களாக விளங்கும் சங்க இலக்கியங்களையும், கல்வெட்டுகள், காசுகள், இலச்சினைகள், சில்லுகள் போன்ற புறச்சான்றுகளையும் மேலும் ஆராய்ந்து அவற்றின் அருமை பெருமைகளை உலகறியச் செய்வது, இன்றைய தமிழறிஞர்களின் தலையாய கடமையாகும்.

### சங்க இலக்கியங்கள்

பழந்தமிழரின் பேரிலக்கியங்கள் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகை நூல்களும் ஆகும். இவை ஏறத்தாழ கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளில் எழுந்தவை. சமயச் சார்பற்ற இந்தியாவில், முதன்முதலில் எழுந்த சமயச்சார்பற்ற பெருங்கவிதைத் தொகுப்பு சங்க இலக்கியங்கள் என்றால், அது மிகையாகாது.

### தனி இலக்கிய மரபு

தமிழ்மொழி, இந்தியாவில் தோன்றிய இந்திய மண்ணிற்கு மட்டுமே தனிச் சிறப்பான இலக்கிய மரபினைக் கொண்டது. இந்த இலக்கிய மரபு வடமொழியிலிருந்து பெறப்படவில்லை. உண்மையில் தென்னிந்தியாவில் சமஸ்கிருத மொழியின் செல்வாக்கு வலிமை பெறுவதற்கு முன்னரே தமிழ் இலக்கியங்கள் தோன்றிவிட்டன. அதனால் தான் தமிழ் இலக்கியங்கள் யாவும் வடமொழி மற்றும் வேறு இந்திய மொழிகளில் உள்ள இலக்கியத்தை போல் இல்லாமல் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. மேலும் சிறந்த இலக்கியக் கொள்கை, விழுமிய மரபுகள், உயர்ந்த அழகியல் செம்மை இவை அனைத்திற்கும் மேலாகத் தனித்து விளங்கும் தனக்கேயுரிய மிகப்பெரிய இலக்கியச் செல்வம் ஆகியவற்றைக் கொண்டிருப்பது தமிழ்மொழியாகும். வடமொழியிலோ வேறு எந்த இலக்கிய மொழியிலோ காணப்படாத கலைநயம் தோய்ந்த ஒருவகை நுட்ப உணர்வைத் தமிழ் இலக்கியங்கள்





கொண்டுள்ளன. வளம்மிக்க விரிந்து பரந்த அறிவின் மாட்சியும் மரபும் அவற்றில் இடம் பெற்றிருக்கின்றன.

### நன்னிகரில்லாத் திருக்குறள்

தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களுள் ஒன்று வள்ளுவர் வழங்கிய திருக்குறள் ஆகும். இந்நூல், ஒழுக்க நெறிகளைக் கற்பிக்கும் உலகின் தலைசிறந்த அறநூல் ஆகும். இந்நூல், தமிழில் செவ்வியல் மொழி, இலக்கிய மரபுகளைத் தம்முள் கொண்டு விளங்குகிறது.

---

இணைப்பு - 2

அத்தியாயம் II

## சட்டத்தமிழ் முதல் தாள் அத்தியாயம் II

அன்றைய ஆங்கிலேய அரசாங்கம் தாய்மொழியைத் தவிர வேறொன்றையும் பேசி அறியாத மக்களை ஆங்கிலமொழி மூலமே ஆண்டு வந்தனர். மெக்காலே என்பவர் 1835ஆம் ஆண்டு ஆங்கிலவழிக் கல்விமுறை குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டார். அதன் பின்னர் ஆங்கில மொழியே அதிகாரப்பூர்வ ஆட்சிமொழியானது. இதனைத் தொடர்ந்து 1844ஆம் ஆண்டு ஹார்டிங் பிரபு ஆங்கிலமொழியை எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கே அரசுப் பணியில் முன்னுரிமை என அறிவித்தார்.

ஆயினும் நாட்டு விடுதலைக்கு முன்பிருந்தே ஆட்சிமொழி குறித்தும் ஆட்சிமொழிச் சட்டம் குறித்தும் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பேசப்பட்டிருக்கிறது. என்றாலும் சட்டமன்ற விவாதங்கள் ஆங்கில மொழியிலேயே நடைபெற்றுள்ளன.

1937ஆம் ஆண்டுவரை இரட்டை ஆட்சிமுறை தொடர்ந்தது. இதன்படி நிர்வாகக்குழு உறுப்பினர்களில் இரண்டு ஆங்கிலேயர்களும் நான்கைந்து பிற உறுப்பினர்களும் இருந்தனர். சட்டப்படி ஆங்கிலத்திலேயே பேச வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்களே உறுப்பினர்களாக இருந்தனர். ஆங்கிலத்தில் பேசினால்தான் புரிந்துகொள்ள முடியும் என்ற நிலையும் இருந்தது.

இந்நிலையில், சட்டமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தும் காணப்பட்டது.





அப்போதைய சட்டமன்றத்தில் 1921 முதல் 1937 வரையில் வெகுசில சொற்பொழிவுகளே தமிழிலும் பிற மொழிகளிலும் பேசப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொண்டு தமிழில் பேசியவர்கள் பி.சி. முத்துச்செட்டியார், எம்.சி. மதுரைப்பிள்ளை, சுவாமி ஏ.எஸ். கஜானந்தம், கே. கிருஷ்ணசாமி நாயக்கர், எஸ். சுப்பிரமணிய மூப்பனார், சையது இபுறாஹீம் சாயபு பகதூர், கே.எஸ். இராமசாமி கவுண்டர், அப்துல் அமீது கான் சாயபு, திருமதி. வி. இலட்சுமி அம்மாள்.

இன்றைய தமிழ்நாடு அன்றைய மெட்ராஸ் மாகாணமாக விளங்கியது. இந்த நிலப்பரப்பில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசப்பட்டன. ஆனால் ஆட்சி மொழியாக ஆங்கிலம் திகழ்ந்தது. அனைத்து நிர்வாகங்களும் ஆங்கில மொழியிலேயே நடைபெற்றன.

நாட்டு விடுதலைக்குப்பின் 1956இல் மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட பிறகு, 01.12.1956இல் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயரில் தனி மாநிலமாகத் தோன்றியது. 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற மாநிலப் பெயரை மாற்றுவதற்குப் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.

'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயரை நீக்கித் தமிழ்நாடு எனப் பெயர் வைக்கவேண்டி தியாகி சங்கரலிங்கனார் விருது நகரில் உண்ணா நோன்பிருந்தார். தொடர்ச்சியான உண்ணா நோன்புப் போராட்டத்தைக் கைவிடுமாறு தலைவர்கள் வேண்டியபோதும் 76 நாள்கள் உண்ணா நோன்பிருந்த சங்கரலிங்கனார் 13.10.1956ஆம் ஆண்டு மறைந்தார்.

இதன் தொடர்ச்சியாகப் பேரறிஞர் அண்ணா மாநிலங்களவையில் முழங்கினார். இதன் பயனாகத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் அடைந்தது நீண்ட நெடிய வரலாறு.

இதனைப்போன்று தமிழ் ஆட்சிமொழிச் சட்டக் கோரிக்கையும் முக்கியத்துவமிக்கது. விடுதலைக்கு முன்பிருந்தே தமிழ் ஆட்சிமொழி குறித்த விவாதம் இருந்தது. விடுதலைக்குப்பின் தீவிரமடைந்தது.

"எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்"

"எண்ணுக தமிழில் எழுதுக தமிழில்"

என்ற சொற்றொடர்களும் முக்கியத்துவம் பெற்றன.

இந்தியா வேறுபட்ட மொழியியல் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நாடாகும். இந்தியாவில் உள்ள மொழி வேறுபாடுகளால் ஏற்பட்ட இடைவெளியைக் குறைக்கும் 'லிங்குவா ஃப்ராங்கா' (இணைப்பு மொழியாக) ஆங்கிலமொழி விளங்கியது. அனைத்துச் சட்டங்கள், சட்ட முன்வடிவுகள் செயலாட்சிமுறைச் சட்டங்களின் அதிகாரப்பூர்வ உரைநடை ஆகியன ஆங்கிலத்திலேயே இருந்தன. உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்தும் ஆங்கிலத்தில் எவ்வாறாயினும், இந்தியாவின் ஆட்சி மொழி நிலையில் இருந்தன. ஆங்கிலத்தை நீக்கி, மாநிலத்தின் அனைத்து அலுவலக மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளிலும் மண்டல மொழியைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, நாடு முழுவதும் நோக்கங்களுக்காக மொழிகளைப் பயன்படுத்துவதற்கான அடிப்படைக் கட்டமைப்பை வழங்குகிறது. அரசியலமைப்பின் 343-ஆம் அமைப்பு விதி இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக முன்மொழிகிறது மற்றும் 345-ஆம் அமைப்பு விதி மாநிலச் சட்டமன்றங்களில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மண்டல மொழிகளை மாநிலத்தின் அலுவல் மொழியாக ஏற்க வழிவகுக்கிறது.



## ஆட்சி மொழியாக தமிழ்

தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம், 1956 (XXXIX/1956)-இன் பிரிவு 5, அனைத்துச் சட்ட முன்வடிவுகள், சட்டங்கள், அவசரச் சட்டங்கள் அல்லது ஆணைகள், விதிகள், ஒழுங்குமுறைவிதிகள், துணைவிதிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் மொழி, மாநில அரசு நியமிக்கலாகும் அத்தகைய தேதியிலிருந்து தமிழாக இருக்க வேண்டும் என வழங்குகிறது. இதைத் தொடர்ந்து, தமிழக அரசு ஜனவரி 14, 1970 அன்று நடைமுறைக்கு வந்த, 13 நவம்பர் 1969 தேதியிட்ட G.O.Ms. எண். 5630இல் பொதுத் (தமிழ் வளர்ச்சி-I) துறை – இதனை வெளியிட்டது. அந்த அறிவிப்பின்படி, சென்னை உயர்நீதி மன்றத்தின் அனைத்துக் கீழமை நீதிமன்றங்களிலும் தமிழ்மொழியானது, சாட்சியங்களைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக, அதிகாரப்பூர்வமான நீதிமன்ற மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும், தமிழ்நாடு ஆட்சிமொழிச் (திருத்த) சட்டம், 1976இன் மூலம் புகுத்தப்பட்ட, தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம், 1956இன் பிரிவுகள் 4A மற்றும் 4B-இன்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின்கீழ் அமைந்துள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக, மற்றும் அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளிலும் தீர்ப்புகள், தீர்பாணைகள் மற்றும் ஆணைகளை வழங்குவதற்கும் நீதிமன்ற மொழியாகத் தமிழ், அறிவிக்கப்பட்டது,

மேற்கூறிய சட்டத்தினைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில அரசு. சட்டத்துறை, 18 ஜனவரி 1982 தேதியிட்ட G.O.Ms. எண். 9-இல் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, (i) உயர் நீதிமன்றத்தின் அனைத்துக் கீழமை நீதிமன்றங்கள், (II) தீர்ப்பாயங்கள் மற்றும் (iii) வாடகை மற்றும் வருவாய் நீதிமன்றங்கள் தொடர்பாக மேற்சொன்ன சட்டத்தின் வகைமுறைகள் நடைமுறைக்கு வரும் நாளாக பிப்ரவரி 1982 இதனைக் குறித்தது.

Government may appoint. In pursuance of this, Tamil Nadu State Government issued a notification in G.O.Ms.No. 5630 of 1969, Public (Tamil Development-I) dated 13th November 1969 which came into force on 14th January 1970. As per the said Notification, Tamil Language was officially adopted as the Court language in all Courts Sub-ordinate to the High Court of Madras for the purpose of recording evidence.

Further Sections 4A and 4B of the Tamil Nadu Official Language Act, 1956 as inserted by the Tamil Nadu Official Language (Amendment) Act, 1976 Tamil was declared as the language of all Courts sub-ordinate to the High Court of Madras for the purposes of recording evidence and for writing Judgements, Decrees and Orders in all Court proceedings.

In pursuance of the said Act Tamil Nadu State Government issued a notification in G.O. Ms. No. 9, Law dated 18th January 1982 appointing 1st February 1982 as the date from which the above provisions shall come into force in respect of (i) civil courts subordinate to the High court; (ii) tribunals and (iii) rent courts and revenue courts.

துணை விதிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் மொழி மாநில அரசு நியமிக்கலாகும் அத்தகைய தேதியிலிருந்து தமிழாக இருக்க வேண்டும் என வழங்குகிறது. இதைத் தொடர்ந்து, தமிழக அரசு ஜனவரி 14, 1970 அன்று நடைமுறைக்கு வந்த, 13 நவம்பர் 1969 தேதியிட்ட G.O.Ms. எண். 5630 இன் 1969, பொது (தமிழ் வளர்ச்சி-I) துறை –இனை வெளியிட்டது. அந்த அறிவிப்பின்படி, சென்னை உயர்நீதி மன்றத்தின் அனைத்து கீழமை நீதிமன்றங்களிலும் தமிழ்மொழியானது, சாட்சியங்களை பதிவு செய்யும் நோக்கத்திற்காக, அதிகாரப்பூர்வமாக நீதிமன்ற மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும், தமிழ்நாடு ஆட்சி மொழி (திருத்தச்) சட்டம், 1976 இன் மூலம் புகுத்தப்பட்ட, தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டம், 1956 இன் பிரிவுகள் 4A மற்றும் 4B –இன் படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் கீழ் அமைந்துள்ள அனைத்து நீதிமன்றங்களில் சாட்சியங்களை பதிவு செய்யும் நோக்கத்திற்காக, மற்றும் அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளிலும் தீர்ப்புகள், தீர்பாணைகள் மற்றும் ஆணைகளை வழங்குவதற்கும் நீதிமன்ற மொழியாக தமிழ், அறிவிக்கப்பட்டது.

மேற்கூறிய சட்டத்தினைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில அரசு, சட்டத் துறை, 18 ஜனவரி 1982 தேதியிட்ட G.O.Ms. எண். 9-இல் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, (i) உயர் நீதிமன்றத்தின் அனைத்து கீழமை நீதிமன்றங்கள், (ii) தீர்ப்பாயங்கள் மற்றும் (iii) வாடகை மற்றும் வருவாய் நீதிமன்றங்கள் தொடர்பாக மேற்சொன்ன சட்டத்தின் வகைமுறைகள் நடைமுறைக்கு வரும் நாளாக 1 பிப்ரவரி 1982 –இனை குறித்தது.

## மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம்.

இந்தியா வேறுபட்ட மொழியியல் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நாடாகும். இந்தியாவில் உள்ள மொழி வேறுபாடுகளால் ஏற்பட்ட இடைவெளியைக் குறைக்கும் 'லிங்குவா ஃப்ராங்கா' (இணைப்பு மொழியாக) ஆங்கில மொழி விளங்கியது. அனைத்து சட்டங்கள், சட்ட முன்வடிவுகள் மற்றும் செயலாட்சிமுறைச் சட்டங்களின் அதிகாரப்பூர்வ உரைநடை ஆங்கிலத்திலேயே இருந்தது. உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருந்தன. எவ்வாறாயினும், இந்தியாவின் ஆட்சி மொழி நிலையில் இருந்து ஆங்கிலத்தை நீக்கி, மாநிலத்தின் அனைத்து அலுவலக மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளிலும் மண்டல மொழியைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, நாடு முழுவதும் அலுவலக நோக்கங்களுக்காக மொழிகளைப் பயன்படுத்து-வதற்கான அடிப்படைக் கட்டமைப்பை வழங்குகிறது. அரசியலமைப்பின் 343-ஆம் உறுப்பு இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாகக் முன்மொழிகிறது மற்றும் 345-ஆம் உறுப்பு மாநில சட்டமன்றங்களில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மண்டல மொழியை மாநிலத்தின் அலுவல் மொழியாக ஏற்க வழிவகுக்கிறது.

### ஆட்சி மொழியாக தமிழ்

தமிழ்நாடு ஆட்சி மொழி சட்டம், 1956 (XXXIX/1956)- இன் பிரிவு 5, அனைத்து சட்ட முன்வடிவுகள், சட்டங்கள், அவசரச் சட்டங்கள் அல்லது ஆணைகள், விதிகள், ஒழுங்குமுறைவிதிகள்,

இணைப்பு – 3

முதல்தாள்

அத்தியாயம் (1)

புறநானூறு

## புறநானூறு (195) பல்சான்றீரே! பல்சான்றீரே! நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோர்களே!

இப்பாடலைப் புனைந்த நரிவெரூஉத் தலையார் காலத்துச் சான்றோர் சிலர் பரிசில் பெறவேண்டி மன்னர்களை வீணாகப் புகழ்ந்தும், போர் புரிய ஊக்குவித்தும் தங்கள் புலமை வளத்தைத் தவறாகப் பயன்படுத்தி வந்தனர். அதைக் கண்டு வருந்திய இவர் தங்கள் சிந்தனையையும் அறிவையும் நல்வழியில் பயன்படுத்துமாறு அவர்களை அறிவுறுத்தி இயற்றிய பாடல் இது.

பல்சான் றீரே பல்சான் றீரே .......

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான

எல்லாரும் உவப்பது: அன்றியும்

நல்ஆற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே!

பொருள்: பயன் இல்லாத முதுமையை அடைந்த பல நல்ல தன்மைகளைக் கொண்ட சான்றோர்களே!

கூர்மையான கோடாரியுடன் பெரும் வலிமை கொண்ட எமதர்மன் உங்களைக் கயிற்றால் கட்டி இழுத்துச் செல்லும்போது நீங்கள் வருந்துவீர்கள்.

எனவே, நல்ல செயல்களைச் செய்யாவிட்டாலும் தீய செயல்களைச் செய்யாமல் தவிர்க்கவும். அதுதான் எல்லோருக்கும் மகிழ்ச்சி, அளிப்பது. அதுதான் உங்களை நல்ல வழியில் செலுத்தும்.

அருஞ்சொற்பொருள்:–

கணிச்சி– மழு, கோடரி:கூர் கூர்மையான: படை – படைக் கலன்: கடுந்திறல் (கடுமை + திறல்): கடுமை – கடுமை, மிகுதி; திறந் – திறம், வலிமை கொண்ட; ஒருவன் – ணருவன் (யமன்); பிணிக்கும் – கயிற்றால் பிணைத்து இழுத்திச் செல்லும்; காலை – நேரத்தில் இரங்குவீர் மாதோ; இரங்குவீர் – வருந்துவீர்; நல்லது செய்தல் – நன்மை செய்தல்; ஆற்றீர் – விலகுவீர்; ஆயினும் – ஆனாலும்; அல்லது செய்தல் – தீமை செய்தல் ஓம்புமின் – தவிர்க்க, விலகுக; எல்லாரும் – அனைவரும் ; உவப்பது– மகிழ்வது ; அன்றியும் –





## பழமொழி நானூறு

விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்

முளிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா

அளிந்தார்கள் ஆயினும், ஆராயான் ஆகித்

தெளிந்தான் விளிந்து விடும்.

(36)

தம்மிடம் அன்பு கொண்டவர்களை ஆராயாமல் நம்பிக்கை கொண்டவன் கட்டாயம் கெட்டே போவான். இப்படி இருக்க ஈவு இரக்கம் அற்றவர்களை நம்பவேண்டாம் என்பதனைச் சொல்லவும் வேண்டுமா? எனவே, எவரையும் ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

விளிந்துவிடும் – விரைந்து கெடும்;

முளிதல் – காய்தல்; தஞ்சம் – எளிமை

கட்டுடைத் தாகக் கருமம் செயவைப்பின் பட்டுண்டாம் கோரும் பரியாரை வையற்க தொட்டாரை ஒட்டாப் பொருளில்லை; இல்லையே அட்டாரை ஒட்டாக் கலம்.

(51)

ஒன்றைச் செய்து முடிக்க ஏவிய ஒருவன் அதன் பயனை எடுத்துக்கொண்டு போய்விடும் இயல்புடையவனாக இருந்தால் அவனை அந்தச் செயலில் ஈடுபடுத்த வேண்டாம். வேறு தக்கவனையே ஈடுபடுத்த வேண்டும். அதாவது தொட்டவர்களை ஒப்புக்கொள்ளாத பொருள்கள் இல்லை. சமையல் செய்தவரை ஒப்புக்கொள்ளாத பாத்திரமும் இல்லை.

வெண்குடைக்கீழ் வாழும் குடிகட்கு வேந்தனும்

செங்கோலன் அல்லாக்கால் செய்வதென் – பொங்கு

படுதிரைச் சேர்ப்ப! மற்று, இல்லையே, யானை

தொடுவுண்ணின் மூடும் கலம்.

(55)

அலைகள் பொங்கியெழும் கடற்கரைக்கு உரியவனே! தன்னுடைய வெண்குடையின்கீழ் வாழ்கின்ற குடிமக்களுக்கு அரசன் நல்லாட்சி நடத்த வேண்டும். அப்படி இல்லையென்றால் அந்த மக்கள் என்னதான் செய்வார்கள். யானையானது தொட்டு உண்ணத் தொடங்கிவிட்டால், அதற்கு மூடி மறைத்து வைக்கத் தகுதியான பாத்திரம் எதுவும் கிடையாது.

அதாவது அரசனே முறைதவறினால் அதை எவராலும் தடுக்க இயலாது.

கி.பி. 850 ஆம் ஆண்டினில் விஜயாலயன் தஞ்சையில் சோழப் பேரரசை நிறுவனான். இதிலிருந்து முதலாம் இராஜேந்திர சோழன் காலம் வரை (கி.பி.1012 – 1044) சோழப் பேரரசு தமிழக அரசியலில் பெரும்பங்கு வகித்தது.

உடன் கூட்டம் :

கி.பி. 11, 12 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இருந்து உடன் கூட்டம் என்னும் குழு சோழப் பேரரசில் இருந்து வந்துள்ளது. இந்தக் குழு ஆட்சியில் ஒரு பங்கு வகித்திருக்கலாம்.



எண்பேராயம், ஐம்பெருங்குழு :

அரசனுக்குத் துணையாக இரண்டு குழுக்கள் செயல்பட்டன. அவை ஐம்பெருங்குழு, எண்பேராயம்.

ஐம்பெரும் குழுவில் மக்கள், புரோகிதர், மருத்துவர், நிமித்திகர், அமைச்சர் ஆகியோர் இருந்தனர்.

எண்பேராயம் என்பது எட்டுப்பேர் கொண்ட அமைப்பாகும்.

அரசனுக்குத் தொண்டு செய்யும் பரிவாரங்கள் என்றும் ஆட்சியில் துணைசெய்யும் அலுவலர் கூட்டம் என்றும் இதனை வகிப்பர்.

இதன்படி கரணிகர், கர்மகாரர், கனக சுற்றம், கடைக்காப்பு, நகர மாந்தர், படைத்தலைவர், ஆனைவீரர், இவுளி மறவர் என்று வகைப்படுவர்.

அலுவலர் :

சிறுதரம், பெருந்தரம் என இரண்டு பிரிவுகளாக அலுவலர் பிரிக்கப்பட்டிருந்தனர்.

சிறு பணி, எடுபிடி, ஏவல் வேலை செய்தோர் சிறுதரம் ஆவர். இவர்கள் பணிமக்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

பெரும் பதவியில் உள்ளோர் பெருந்தரம் ஆவர்.

இடைப்பட்ட ஊழியர் சிறுதரத்துப் பெருந்தரம் என்று அழைக்கப்பட்டனர்.

வரி :

அரசனுக்கு அளிக்கப்படும் வரி 'இறை' எனப்பட்டது. நிலத்தின் தன்மைக்கேற்ப நிலவரி விதிக்கப்பட்டது. காடு என்னும் பிரிவும் இருந்தது.

மிகப்பெரும் வரிக் கணக்குகளைப் பார்க்கும் அலுவலகம் புறவுவரித்திணைக்களம் என்று வழங்கப்பட்டது. இதில் பத்துப் பிரிவுகள் இருந்தன.

(1) புறவுவரித்திணைக்களம்

(2) வரிப்பொத்தகம்

(3) புறவுவரித்திணைக்களக் கண்காணி

(4) முகவெட்டி

(5) தெரிப்பு

(6) தரவு சாத்து

(7) பளணியாயம்

(8) வரியிலிடு

(9) வரிப்பொத்தகக் கணக்கு

(10) பட்டோலை

சபா, மகா சபா :

கிராமங்களின் நிர்வாகப் பொறுப்பு சபா என்று அழைக்கப்பட்டது. இது கிராம அமைப்பின்கீழ் இருந்தது.

தொண்டை மண்டல கிராமங்களில் இவ்வமைப்பு இருந்தது. இதனைப் போன்று உத்திரமேரூர் பகுதியில் சபா செயல்பட்டு இருக்கிறது.





முதலாம் பராந்தக சோழன் :

இவனது காலத்தில் உத்திரமேரூரில் சபா செயல்பட்டது. இது மகா சபா எனவும் வழங்கப்பட்டது. நில உரிமையாளர்கள் இதில் அங்கம் வகித்தனர். அவர்கள் சபையார் என அழைக்கப்பட்டனர்.

கிராமம் பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. ஒவ்வொன்றும் குடும்பு அல்லது சேரி என்று அழைக்கப்பட்டன. உத்திரமேரூர் கிராமத்தில் 30 வட்டங்கள் இருந்தன.

கிராமப் பணி, பராமரிப்பு நிர்வாகம் முதலியவற்றை சபா கவனித்துக்கொண்டது. பொறுப்புகளை நிறைவேற்ற 'வாரியம்' என்னும் குழுக்கள் இருந்தன. இவற்றின் அலுவலர்கள் 'வாரியார்' என்று அழைக்கப்பட்டனர்.

(25)

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

### பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு"

நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகியவை நீதி நூல்கள்.



(26)

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே – மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை

23

நீதிமன்றத்தில் பொய் பேசி – பொய்ச் சான்று சொன்னவரின் வீட்டில், பேய் குடி புகும். வெள்ளை எருக்கு பூக்கும், பாதாள மூலிக் கொடி படரும், மூதேவி சென்று தங்கியிருப்பாள், பாம்பும் குடியிருக்கும்.

(23)

(27)

இணைப்பு - 4

முதல்தாள்

அத்தியாயம் 17-18

திருக்குறள்

நீதி நூல்களுள் தலைசிறந்தது திருக்குறள் ஆகும்.

இதனை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார்.

திருக்குறள் மூன்று பகுதிகளைக் கொண்டது. அவை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்பன ஆகும்.

இந்நூல் 133 அதிகாரங்களைக் கொண்டது. அதிகாரம் என்றால் அத்தியாயம் என்று பொருள். 1330 குறள்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்

கோடாமை சான்றோர்க் கணி"

சமமாக நின்று பொருளை அளந்து அறிவிக்கும் தராசுக் கோல்போன்று இருத்தல் உயர்ந்தோர்க்கு அழகாகும்.

அதாவது ஒருபக்கமும் சாயாமல் நிமிர்ந்து நின்று தன்னிடம் உள்ள பொருளின் அளவைத் தெளிவாகக் காட்டுவது தராசுக் கோலாகும்.

சான்றோர்களும் எந்தப் பக்கமும் சாயாமல் நேர்மையுடன் செயல்படுவதே அழகாகும்.

(சமன்– சமம்; சீர்தூக்கும் – சரியாக அளந்து காட்டும்; கோல்– தராசுக்கோல் ; கோடாமை– சாயாமல்)

குற்றம் கடிதல்

(ஒருவன் தன்னிடம் உள்ள குற்றம் குறைகளை நீக்கிக்கொள்வதே குற்றம் கடிதல் ஆகும்.

காமம், கோபம், மயக்கம் ஆகியவை மனிதரிடம் காணப்படும் குற்றங்கள் ஆகும்)

"தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணை

கொள்வர் பழிநாணு வார்"



(28)

பழி பாவங்களுக்குப் பயப்படுவர்கள் தினை அளவு குற்றம் ஏற்பட்டாலும் பனைமரம் அளவுக்குப் பெரிதாக நினைத்துப் பயப்படுவார் அறிவுடையோர் குற்றம் செய்வதற்கு வெட்கப்படுவார்கள்.

(தினை– தினை அரிசி போன்று சிறியது; வரினும்– வந்தாலும்; கொளல் – நினைத்துக் கொள்வார்கள்; பழி– இழிவு; நாணுதல் – வெட்கப்படுதல்)

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க

சான்றோர் பழிக்கும் வினை" (656)

பெற்றதாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுற்றச் செயல்களைச் செய்யக்கூடாது.

... மு. வரதாரசன்

தன்னைப் பெற்றவளின் பசியைக் காண நேர்ந்தாலும் அதைப் போக்கப் பெருமக்கள் பழிக்கும் செயல்களைச் செய்யாது விடுக.

... சாலமன் பாப்பையா

பசியால் துடிக்கும் தனது தாயின் வேதனையைத் தணிப்பதற்காகக் கூட இழிவான செயலில் ஈடுபடக்கூடாது.

... மு. கருணாநிதி

"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்

கொள்வர் பழிநாணு வார்"

பழி நாணுகின்ற பெருமக்கள் தினையளவாகிய சிறு குற்றம் நேர்ந்தாலும் அதை பனையளவாகக் கருதிக் (குற்றம் செய்யாமல்) காத்துக்கொள்வர்.

...மு. வரதராசன்

பழிபாவங்களுக்கு அஞ்சி, நாணும் பெரியோர், தினை என மிகச்சிறிய அளவே குற்றம் வந்தாலும், அதனைப் பனை என மிகப்பெரிய அளவாகக் கொள்வர்.

... சாலமன் பாப்பையா

பழிக்கு நாணுகின்றவர்கள், தினையளவு குற்றத்தையும் பனையளவாகக் கருதி, அதைச் செய்யாமல், தங்களைக் காத்துக்கொள்வார்கள்.

... மு. கருணாநிதி

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்"

ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய் சொல்லக்கூடாது பொய் சொன்னால் அதைக் குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

... மு. வரதராசன்

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - ஒருவன் தன் நெஞ்சு அறிவது ஒன்றனைப் பிறர் அறிந்திலர் என்று பொய்யா தொழிக; பொய்யதப்பின் தன்நெஞ்சே தன்னைச் சுடும் - பொய்த்தானாயின் அதனை அறிந்த தன் நெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய் நின்று, தன்னை அதன் பயனாய துன்பத்தை எய்துவிக்கும்.

விளக்கம்: (நெஞ்சு சரியாதல்" கண்டவர இல்லேன உலகத்துள் உணராதார் - தங்காது தகைவின்றித் தாம் செய்யும் வினைகளுள் - நெஞ்சு அறிந்த கொடியவை மறைப்பவும் மறையாவாம் - நெஞ்சத்திற் குறுகிய கரி இல்லை ஆகலின்" (கலித் நெய்தல் 8) என்பதனானும் அறிக. பொய் மறையாமையின் அது கூறலாகாது என்பது இதனான் கூறப்பட்டது)

.... பரிமேலழகர்



குறள் 118 :

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

விளக்கம் :

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாக சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

- மு. வரதராசன்

ஒரு பக்கம் சாய்ந்து விடாமல் நாணயமான தராசு முள் போல இருந்து நியாயம் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

- கலைஞர் மு. கருணாநிதி

முதலில் சமமாக நின்று பிறகு தன்மீது வைக்கப்பட்ட பாரத்தை நிறுத்துக் காட்டும் தராசு போல, நீதிக்குரிய இலக்கணங்களால் அமைந்து ஓரம் சார்ந்து விடாமல் இருப்பது சான்றோராகிய நீதிபதிகளுக்கு அழகாம்.

- சாலமன் பாப்பையா

31

குறள் 549 :

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

விளக்கம் :

குடிகளைப் பிறர் வருந்தாமல் காத்து, தானும் வருந்தாமல் காப்பாற்றி, அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல், அரசனுடைய தொழில் பழி அன்று.

– மு. வரதராசன்

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

– கலைஞர் மு. கருணாநிதி

அயலவர் அழிக்காமல் குடிமக்களையும் தன்னையும் காத்து, குடிகளின் குறைகளைக் களைந்து நேரிய ஆட்சி செய்வது, ஆட்சியாளருக்குக் குறை ஆகாது. அது அவர் தொழில்.

– சாலமன் பாப்பையா



32

குறள் 436 :

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்றமாகும் இறைக்கு.

விளக்கம்

முன்னே தன் குற்றத்தைக் கண்டு நீக்கி பிறகு பிறருடையக் குற்றத்தை ஆராயவல்லவனானால், தலைவனுக்கு என்ன குற்றமாகும்.

– மு. வரதராசன்

முதலில் தனக்குள்ள குறையை நீக்கிக் கொண்டு அதன் பின்னர் பிறர் குறையைக் கண்டு சொல்லும் தலைவனுக்கு என்ன குறை நேரும்?

– கலைஞர் மு. கருணாநிதி

முதலில் தன் குற்றத்தைக் கண்டு விலக்கிப் பிறகு அடுத்தவர் குற்றத்தைக் காணும் ஆற்றல் மிக்க அரசிற்குக் குற்றம் ஏதும் வராது!

– சாலமன் பாப்பையா

சட்டத்தமிழ் - முதல்தாள்



இணைப்பு - 5

சட்டத்தின் தோற்றம் மற்றும் பண்புகள் – சட்டத்தின் வடிவங்கள் – சட்டம் – இயற்றுமுறைச்சட்டம் – மேலாணை அல்லது அவசரச்சட்டம் – சட்டம் மற்றும் மேலாணை – வேறுபாடுகள் – கட்டளை (ஆணை) – விதி – ஒழுங்குமுறைவிதி – துணை விதி – தீர்ப்புமுறைச்சட்டம்

## அலகு 9

**மாவட்ட மற்றும் உயர் நீதிமன்றத்தில் பயன்படுத்தத்தக்க அடிப்படை சட்டப் பதங்களும் சட்ட முதுமொழிகளும் (Legal Terms and Legal Maxims)**

1. அடிமுதலே (அல்லது) ஆரம்பத்திலிருந்தே [Abinitio]
2. கைவிடுதல் [Abandon]
3. அற்றுப்போதல் (அல்லது) அகற்றல் [Abatement]
4. ஆள்கடத்தல் (அல்லது) ஆட்கடத்தல் [Abduction]
5. குற்ற உடந்தை [Abetment]
6. உரியவரில்லாநிலை [Abeyance]
7. இணங்கி ஒழுகு [Abide]
8. வசிப்பிடம் (அல்லது) வாழ்விடம் [Abode]
9. கருச்சிதைவு [Abortion]
10. சட்ட நீக்கம் [Abrogation]
11. தலைமறைவாதல் [Abscond]
12. முழுமையான உரிமைமாற்றம் [Absolute Conveyance]
13. முழுப்பொறுப்பு [Absolute Liability]
14. முழுச்சொத்துரிமையர் [Absolute Owner]
15. வரையிலாச் சிறப்புரிமை [Absolute Privilege]
16. முழுமையான உரிமைமூலம் [Absolute Title]
17. விடுவி [Absolve]
18. தவிர்த்தல் (அல்லது) விலகியிருத்தல் [Abstain]
19. இழிபயன்பாடு [Abuse]
20. உரிமைவிரைவு [Acceleration]
21. ஏற்பு [Acceptance]
22. அணுகுதல் [Access]
23. சொத்துவளர்ச்சி [Accession]
24. குற்றத்துணைவர் [Accessory]
25. விபத்து (அல்லது) எதிர்பாரா விளைவு [Accident]
26. [illegible]குற்றவாளி [Accomplice]
27. ஒத்திசைவும் உளநிறைவும் [Accord and Satisfaction]
28. கணக்கெழு வழக்கு [Account Suit]
29. உரிமைச் சேர்வு [Accrual of Right]
30. [illegible] [Accumulative Sentence]
31. குற்றஞ்சாட்டுதல் [Accusation]
32. ஒப்புகை [Acknowledgment]
33. தெரிவி (அல்லது) அறியச் செய் [Acquaint]
34. குறிப்பிசைவு [Acquiescence]
35. நில எடுப்பு [Acquisition of Land]
36. செல்லெழுத்து [Acquittance]
37. நல்லெண்ணச் செயல் [Act in good faith]
38. கடவுள் செயல் (அல்லது) தெய்வச் செயல் [Act of God]
39. வகை செய்வதற்கான ஓர் சட்டம் [Act to Provide, An]
40. [illegible] (அல்லது) [illegible] [Actionable Claim]







41. உள்ளபடியான [Actual]
42. காப்பீட்டுக் கணிப்பாளர்கள் [Actuary]
43. ஒரே பொருள் குறித்து (அல்லது) ஒத்த விடயம் [Ad-idem]
44. அதற்கென அமைந்த [Adhoc]
45. உயில்வழிக் கொடையை வறிதாக்கல் (அல்லது) உயில்அழி செயல்[Ademption of Legacy]
46. நடைமுறைச் சட்டம் [Adjective Law]
47. ஒத்தி வைப்பு (அல்லது) வாய்தா [Adjournment]
48. நீதிமுறை தீர்மானிப்பு [Adjudication]
49. ஒத்தேற்புரை [Admission]
50. மதிப்பிற்கேற்ப [*Ad-valorem*]
51. ஆணையுறுதியாவணம் (அல்லது) பிரமாணப் பத்திரம் [Affidavit]
52. திருத்தம் [Amendment]
53. நீதிமன்றத்தின் நண்பர் [*Amicus curiae*]
54. குற்றமேற்ற சாட்சி [Approver]
55. நன்னம்பிக்கையில் (அல்லது) நல்லெண்ணத்தில் [*Bona fide*]
56. ஒப்பந்த மீறுகை [Breach of Contract]
57. அதிகப்ட்ச தண்டனை (அல்லது) மரண தண்டனை [Capital Punishment]
58. வலுக்கட்டாயம் [Coercion]
59. சமரசம் [Compromise]
60. சம்மதம் [Consent]
61. எதிர் பாத்தியம் [Counter - claim]
62. நீதிமன்றம் ஆலோசனை பெற விழைகிறது [*Cur. ad. vult*]
63. இழப்பீடு [Damages]
64. நிகழ்வு நிலை [*De facto*]
65. சட்ட நிலை [*De jure*]
66. அவதூறு [Defamation]
67. எதிர்வாதம் [Defence]
68. வைப்பீடு (அல்லது) வைப்புத் தொகை [Deposit]
69. தவறாக நிறுத்திக் கொள்ளுதல் [Detinue]
70. சட்டப்படியான உடைமைக் கைப்பற்றீடு [Distress]
71. அச்சாரத் தொகை (அல்லது) முன்பணம் [Earnest Money]
72. தகைமை நெறி [Equity]
73. முரண்தடை [Estoppel]
74. சாட்சியம் [Evidence]
75. நிறைவேற்றம் [Execution]
76. ஒருதலைப்பட்சம் [*Exparte*]
77. மோசடி [Fraud]
78. ஆட்கொணர்வித்தல் [*Habeas Corpus*]
79. செவிவழிச் செய்தி (அல்லது) கேள்விப்பட்ட தகவல் [Hearsay]
80. மரணம் விளைவித்தல் [Homicide]
81. தனிமை அறையில் [*In Camera*]
82. வறியர் நிலை [*In forma pauperis*]
83. ஆரம்பநிலையிலேயே [*In Limine*]
84. உறுத்துக்கட்டளை [Injunction]
85. நொடிப்பு நிலை [Insolvency]
86. காப்பீடு [Insurance]
87. வழக்கெழு வினா [Issue]
88. தீர்ப்புரை [Judgment]

89. அதிகாரவரம்பு [Jurisdiction]
90. பொறுப்பு (அல்லது) பொறுப்படைவு [Liability]
91. உரிமம் [License]
92. பேருரிமைப் பட்டயம் [Magna cartat]
93. வாழ்க்கைப் பொருளுதவி (அல்லது) ஜீவனாம்சம் [Maintenance]
94. தீய எண்ணத்தில் [*Malafides*]
95. இளவர் [Minor]
96. அடைமானம் [Mortgage]
97. கொலை [Murder]
98. இயற்கை நீதி [Natural Justice]
99. அவசியத் தேவைகள் [Necessaries]
100. கவனமின்மை [Negligence]
101. மாற்று முறையாவணம் [Negotiable Instrument]
102. ஆணையுறுதி மொழி [Oath]
103. ஆபாசமான [Obscene]
104. பாகப்பிரிவினை [Partition]
105. பொய்யுரைத்தல் [*Perjury*]
106. பெயர்சுட்டு நபர் [*Persona designata*]
107. வாதி [Plaintiff]
108. பகர அதிகாரம் [Power of Attorney]
109. வாங்கு முன்னுரிமை [Pre-emption]
110. நீளுடைமை (அல்லது) நீடானுபோக உரிமை [Prescription]
111. துணிபு [Presumption]
112. சார்புறவு [Privity]
113. கடனுறுதிச் சீட்டு [Promissory Note]
114. சான்றுறுதி [Proof]
115. வரம்புரை [Proviso]
116. மறுபயன் [*Quid pro quo*]
117. வழக்குச் சொத்துப் பேணுநர் [Receiver]
118. மீட்பு [Redemption]
119. காவல் வைப்பு [Remand]
120. தீர்வழி [Remedy]
121. வாடகை [Rent]
122. முன்தீர்ப்புத் தடை [Res judicata]
123. அறுதியளிப்பு (அல்லது) தீர்வு [Settlement]
124. நாள் குறிப்பிடாமல் [Sine die]
125. ஏற்றபடி ஆற்றுதல் (அல்லது) குறித்தவகை நிறைவேற்றம் [Specific Performance]
126. முத்திரைத் தீர்வை [Stamp Duty]
127. நிறைவேற்றத்தின் இடைநிறுத்தம் [Stay of Execution]
128. அழைப்பாணை [Summons]
129. பிணையாள் [Surety]
130. வரிவிதிப்பு [Taxation]
131. குத்தகைதாரர் [Tenant]
132. உரிமை மூலம் [Title]
133. தீங்கு (அல்லது) உரிமைத் தீங்கு [Tort]
134. வாணிபக் குறி [Trade Mark]
135. உரிமை மாற்றம் [Transfer]
136. இராஜத் துரோகம் (அல்லது) அரசுக்கெதிரான செயல் [Treason]





137. அத்து மீறல் [Trespass]
138. வழக்கு விசாரணை [Trial]
139. பொறுப்புரிமை அமைப்பு [Trust]
140. அதிகாரவரம்பு மீறிய [Ultra vires]
141. வழக்காறு [Usage]
142. வழக்குரை அதிகார ஆவணம் [Vakalat]
143. பேராற்றல் [Vis Major]
144. இல்லாநிலையது [Void]
145. தவிர்தகு நிலை [Voidable]
146. தன்னிச்சையாக [Voluntarily]
147. உரிமை விடுப்பு (அல்லது) தளர்த்திடு [Waiver]
148. விசாரணைக்கு அனுப்பும் ஆணை [Warrant of Committal]
149. உயில் அல்லது விருப்பாவணம் [Will]
150. குந்தகமின்றி [Without Prejudice]

இணைப்பு - 6



## பிணைவிடாக் குற்றத்தில் தாக்கல் செய்யப்படும் பிணை மனுவின் மாதிரி படிவம்

**மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 3 நீதிமன்றம், சேலம்.**

குற்றவியல் பலவகைப்பட்ட மனு
எண்.     /2024
in
குற்றம் எண். 41/2024
*(சேலம், அஸ்தம்பட்டி காவல் நிலையக் கோப்பில்)*

*காளியப்பன்* - *மனுதாரர் / குற்றஞ்சாட்டப்பட்டவர்.*

*- எதிராக -*

*தமிழ்நாடுஅரசு,*
*பிரதிநிதியாக காவல்துறை ஆய்வாளர்,*
*அஸ்தம்பட்டி காவல் நிலையம், சேலம் - 7.* - *எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்.*

### [1]குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 437-ன் கீழ் தாக்கல் செய்யப்படும் பிணை மனு

மேற்கண்ட மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் பின்வருமாறு பணிந்து சமர்ப்பிக்கிறார்:-

1. [2]இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 411-இன் கீழான குற்றம் புரிந்ததாக மனுதாரர் எதிர்மனுதாரரால் கைது செய்யப்பட்டு, மாண்பமை இந்நீதிமன்றத்தால் 3-6-2024 அன்று நீதிமுறைக் காவலில் வைக்க ஆணையிடப்பட்டுள்ளார்.

2. மனுதாரர் நிரபராதி. அவர் மேற்படி குற்றத்தில் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளார். அவர் குற்றம் எதையும் புரியவில்லை.

3. மனுதாரர் மிகவும் மரியாதைக்குரிய குடும்பத்தை சேர்ந்தவர். அவரது தந்தை இந்தியன் வங்கி, கொண்டப்பநாயக்கன்பட்டி கிளையில் மேலாளராக பணிபுரிகிறார். மேலும் மனுதாரர் கதவு எண். 22, முனியப்பன் கோவில் தெரு, மணக்காடு, அஸ்தம்பட்டி, சேலம்-7 என்ற முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறார்.

4. மனுதாரர் சட்டத்தை மதித்து நடக்கும் ஒரு குடிமகன். இதற்கு முன்பு அவர் எவ்விதமானதொரு குற்றத்தையும் புரியவில்லை என்று சமர்ப்பிக்கின்றார்.

5. மனுதாரரை பிணையில் விடுவித்தால், அவர் சாட்சிகள் மற்றும் ஆதாரங்களை எவ்விதத்திலும் கலைக்க மாட்டார் என பொறுப்பேற்கிறார்.

---

1. பிணைவிடாக்குற்றத்தில் பிணையில் விடுவிக்கக்கோரும் மனுவை 01/07/2024 முதல் பாரதிய நாகரிக சுரக்சா சன்ஹிதா, 2023–இன் பிரிவு 480–இன் கீழ் தாக்கல் செய்தல் வேண்டும். இது குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் பதிலாக புதிதாக இயற்றப்பட்டு 01/07/2024–ஆம் தேதியிலிருந்து செயல்திறத்திற்கு வரவுள்ள சட்டமாகும்.

2. இந்திய தண்டனைச்சட்டத்தின் பிரிவு 411–க்கு (திருட்டுச்சொத்தை நேர்மையற்ற முறையில் பெறுதல்) 01/07/2024 முதல் செயல் திறத்திற்கு வரவுள்ள புதிய தண்டனைச்சட்டமான பாரதிய நியாய சன்ஹிதா, 2023–இன் நேரிணையான சட்டப்பிரிவு 317(2) ஆகும்.





6. மனுதாரர் கடந்த 6 நாட்களாக நீதிமுறைக் காவலில் உள்ளார். கர்ப்பிணி மனைவி மற்றும் கைக்குழந்தை அடங்கிய அவரது குடும்பத்தில் அவரைத் தவிர வருமான மீட்டும் நபர்கள் வேறு எவரும் இல். அவரை பிணையில் விடுவிக்காது போனால், அவரது குடும்பம் ஈடுசெய்யவியலாத இழப்புக்கும் இடர்பாட்டுக்கும் ஆளாகும்.

7. நீதிமன்றம் மனநிறைவு கொள்ளும் வகையில் தகுந்த பிணையாளர்களை (Sureties) அளிக்க மனுதாரர் தயாராயிருக்கிறார். மேலும் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகள் எதற்கும் கட்டுப்பட்டு நடக்க சம்மதிக்கின்றார்.

எனவே மேற்படி மனுதாரர் / குற்றஞ்சாட்டப்பட்ட நபரை பிணையில் விடுவித்து தக்க நீதி நல்கிடுமாறு மாண்பமை இந்நீதிமன்றத்தை மனுதாரர் வணங்கி வேண்டுகிறார்.

(ஒப்பம்) பி.ஆர்.ஜெயராஜன்,
மனுதாரரின் வழக்குரைஞர்

9-6-2024
சேலம்.

## பிடியாணையை திரும்பப்பெற்று இரத்து செய்யக்கோரும் மனுவின் மாதிரிப்படிவம்

**[Model Form of Petition to Re-call and Cancel the Warrant]**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஏற்காடு.**

குற்றவியல் பல்வகைப்பட்ட மனு
எண். /2024
in
பட்டிகை வழக்கு எண். 302/2023

குமரன், த/பெ. அப்பாவு
7, ரெட்ரிட் சாலை,
(மாண்ட்போர்ட் ஸ்கூல் அருகில்),
ஏற்காடு, சேலம் மாவட்டம் - மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர்.

- எதிராக -

தமிழ்நாடு அரசு,
பிரதிநிதியாக
காவல்துறை துணை ஆய்வாளர்,
ஏற்காடு காவல் நிலையம், ஏற்காடு. - எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்.

**[1]<u>குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 70(2)-ன் கீழ் மனு</u>**

**மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் உரிய பணிவடக்கத்துடன் பின்வருமாறு சமர்ப்பிக்கிறார்:-**

1. மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது இந்திய தண்டனைச்சட்டத்தின்/பாரதிய நியாய சன்ஹிதா, 2023-இன் பிரிவு ..........படியான குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவர் மாண்பமை இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை எதிர் கொண்டு வருகிறார்.

2. மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவரின் தோன்றுகைக்காக மேற்படி வழக்கு கடந்த 3-6-2024-ஆம் தேதியன்று ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்றைய தேதியில் அவருக்கு திடீரென ஏற்பட்ட கடுமையான வயிற்றுப்போக்கின் காரணமாக அவரால் நீதிமன்றத்தில் தோன்ற இயலவில்லை. இதனால், மனுதாரரைக் கைது செய்து அழைத்து வர மாண்பமை இந்நீதிமன்றம் பிணைவிடாப் பிடியாணையை (Non-bailable Warrant) மேற்படி 3/6/2024-ஆம் தேதியில் பிறப்பித்துவிட்டது.

3 மனுதாரர் இவ்வாறு நீதிமன்றத்தில் தோன்றத் தவறியது வேண்டுமென்றோ அல்லது விருப்பத்துடனோ நிகழ்ந்ததல்ல. அவருக்கு அன்றைய தேதியில் திடீரென் ஏற்பட்ட கடுமையான வயிற்றுப்போக்குதான் இதற்கு காரணமாகும்.

4. மனுதாரர் இதற்கு முன்பு வழக்கு விசாரணைத் தேதிகளில் ஒழுங்காக நீதிமன்றத்தின் முன்பு தோன்றிக் கொண்டிருந்தார். மனுதாரர் மரியாதைக்குரிய குடும்பத்தைச் சார்ந்தவர்.

5. மனுதாரர் இன்று இந்நீதிமன்றத்தின் முன் தன்னிச்சையாக சரணடைகிறார்.

---

1. பிடியாணையை திரும்பப்பெற்று இரத்து செய்யக்கோரும் மனுவை 01/07/2024 முதல் பாரதிய நாகரிக சுரக்சா சன்ஹிதா, 2023–இன் பிரிவு 72(2)–இன் கீழ் தாக்கல் செய்தல் வேண்டும். இது குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் பதிலாக புதிதாக இயற்றப்பட்டு 01/07/2024–ஆம் தேதியிலிருந்து செயல்திறத்திற்கு வரவுள்ள சட்டமாகும்.







எனவே, மேற்கண்ட காரணங்களுக்காக, மனுதாரருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிணைவிடா பிடியாணையை திரும்பப்பெற்று இரத்து செய்து தக்க நீதி நல்கிடுமாறு மனுதாரர் மாண்பமை இந் நீதிமன்றத்தை பணிவுடன் வேண்டுகிறார்.

ஏற்காட்டில் 06/06/2024-ஆம் தேதியில் கையொப்பமிடப்பட்டது.

(ஒப்பம்) குமரன்
மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர்.

(ஒப்பம்) P.R.ஜெயராஜன், M.L.,
மனுதாரரின் வழக்குரைஞர்

## சரண் மனுவின் மாதிரிப்படிவம்
## [Model Form of Surrender Petition]

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஏற்காடு.

குற்றவியல் பல்வகைப்பட்ட மனு
எண். /2024
in
பட்டிகை வழக்கு எண். 302/2023

குமரன், த/பெ. அப்பாவு
7, ரெட்ரிட் சாலை,
(மாண்ட்பேர்ட் ஸ்கூல் அருகில்),
ஏற்காடு, சேலம் மாவட்டம் - மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர்.

**- எதிராக -**

தமிழ்நாடு அரசு,
பிரதிநிதியாக
காவல்துறை துணை ஆய்வாளர்,
ஏற்காடு காவல் நிலையம், ஏற்காடு. - எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்.

**சரண் மனு**

மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் உரிய பணிவடக்கத்துடன் பின்வருமாறு சமர்ப்பிக்கிறார்:-

1. இந்திய தண்டனைச்சட்டம் / பாரதிய நியாய சன்ஹிதா, 2023-இன் பிரிவு ........ படியான குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மனுதாரர், வழக்கின் கேட்பு தேதியான 03/06/2024-ஆம் தேதியன்று கடும் வயிற்றுப்போக்கு காரணமாக நீதிமன்றத்திற்கு வருகை தர முடியவில்லை. எனவே அவருக்கு எதிராக மாண்பமை இந்நீதிமன்றம் பிணைவிடாப் பிடியாணையை (Non-bailable Warrant) பிறப்பித்துவிட்டது. மனுதாரர் மேற்படி 03/06/2024-ஆம் தேதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி முடியாமல் போனது வேண்டுமென்றோ, விருப்பப்பூர்வமாகவோ நிகழ்ந்த ஒன்றல்ல.

2. தற்போது மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தன்னிச்சையாக சரணடைந்துள்ளார். மேலும், பிடியாணையை திரும்பப் பெற்று இரத்து செய்யும்படி கோரி இத்துடன் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 70(2)-இன் கீழ் மனுவையும் தாக்கல் செய்துள்ளார்.

எனவே மனுதாரரின் சரணை ஏற்கும்படியும், அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை இம்மனுவின் ஓர் அங்கமாக பாவித்து மேல் நடவடிக்கைகளுக்கு ஆணையிட்டு தக்க நீதி நல்கிடும்படியும் மனுதாரர் மாண்பமை இந்நீதிமன்றத்தை வணங்கி வேண்டுகிறார்.

சேலத்தில் 06/06/2024-ஆம் தேதியில் கையொப்பமிடப்பட்டது.

(ஒப்பம்) குமரன்
மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர்.

(ஒப்பம்) P.R.ஜெயராஜன், M.L.,
மனுதாரரின் வழக்குரைஞர்



## குற்றத்தை ஒத்துக் கொள்ள மனுவின் மாதிரி படிவம்
## [Model Form of Guilty Memo/Admission Petition]

## குற்றவியல் நீதித்துறை நடுவர் 4 நீதிமன்றம், சேலம்.

பட்டிகை வழக்கு எண். 302/2024

.........................,
......................... மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர்.

- எதிராக -

தமிழ்நாடு அரசு,
பிரதிநிதியாக காவல்துறை துணை ஆய்வாளர்,
சூரமங்கலம் காவல் நிலையம்,
சூரமங்கலம், சேலம். - எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்.

**[1]குற்றவியல் நடைமுறைச் சட்டம்**
**பிரிவு 241 / 252-ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் தாக்கல் செய்யும்**
**குற்றத்தை ஒத்துக் கொள்ளும் மனு**

1. மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது ................ சட்டத்தின் ........ பிரிவின் கீழான குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட குற்றத்தைச் செய்ததாக மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒப்புக் கொள்கிறார்.

3. மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு தினக்கூலி ஆவார். அவர் ஒருவரது வருமானத்தில் மட்டுமே அவரது குடும்பம் வாழ்கிறது. இதற்கு முன் அவர் எந்தக் குற்றத்தையும் செய்தவர் அல்ல. இதுவே அவர் புரிந்த முதல் குற்றமாகும். அவர் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர். அவர் தண்டனை அடைந்து சிறை சென்றால், அவருடைய குடும்பம் பெரிதும் பாதிக்கப்படும்.

4. இனி ஒழுக்கமான முறையில் நடந்து கொள்வதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் உறுதியளிக்கிறார்.

எனவே மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டிப்பதிலும் அவருக்கு தண்டனை வழங்குவதிலும் கருணை காட்டி தக்க நீதி நல்கிடுமாறு மாண்பமை இந்நீதிமன்றத்தை மனுதாரர் வணங்கி வேண்டுகிறார்.

...................த்தில் .................. தேதியில் கையொப்பமிடப்பட்டது.

(ஒப்பம்) ......................
மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர்

(ஒப்பம்) ......................
மனுதாரரின் வழக்குரைஞர்

குறிப்பு : பிடியாணை வழக்குகளில் குற்றத்தை ஒத்துக் கொள்வது குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 241-ன் கீழ் செய்யப்பட வேண்டும்; அழைப்பாணை வழக்குகளில், பிரிவு 252-ன் கீழ் செய்யப்பட வேண்டும். சிறு வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பாக வழக்கறிஞரால் குற்றத்தை ஒத்துக் கொண்டு அபராதம் கட்ட பிரிவு 253-ன் கீழ் மனு செய்யப்பட வேண்டும்.

1. குற்றத்தை ஒத்துக்கொள்ளும் மனுவை 01/07/2024 முதல் பாரதிய நாகரிக சுரக்சா சன்ஹிதா, 2023-இன் பிரிவு 264-இன் கீழ் (பிடியாணை வழக்குகளில்) தாக்கல் செய்தல் வேண்டும்; அழைப்பாணை வழக்குகளில் பிரிவு 275-இன் கீழ் தாக்கல் செய்தல் வேண்டும். சிறு வழக்குகளில் பிரிவு 275(2)-இன் கீழ் தாக்கல் செய்தல் வேண்டும்.

# குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேர்முகமாக தோன்றுவதை தளர்த்தக் கோரும் மனுவின் மாதிரிப்படிவம்
# [Petition to dispense with the personal attendance of the Accused]

**குற்றவியல் நீதித்துறை நடுவர் ........ நீதிமன்றம், சேலம்.**

குற்றவியல் பல்வகைப்பட்ட மனு
எண்.      /2024
in
பட்டிகை வழக்கு எண்: 450/2024

........................ - மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர்.

- எதிராக -

........................ - எதிர்மனுதாரர் /குற்றமுறையிடுபவர்.

**[1]குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 205 –ன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனு**

மேற்படி வழக்கில் மனுதாரர் / குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்வாகியுள்ளது. மேற்படி மனுதாரர் /குற்றஞ்சாட்டப்பட்டவர் மிகவும் வயதானவர். மேலும் அவர் பக்கவாத நோயால் அவதிப்படுகிறார். (அவர் நீதிமன்றத்தில் தோன்ற முடியாமைக்குண்டான காரணங்களை இங்கே குறிப்பிடவும்). அவர் நீதிமன்றத்திற்கு வர இயலாத இக்கட்டான சூழ்நிலையில் உள்ளார்.

எனவே மேற்படி மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேர்முகமாக தோன்ற வேண்டும் என்ற கட்டுப்பாட்டை தளர்த்தி, அவர் சார்பாக அவரது வழக்குரைஞர் முன்னிலையாக அனுமதி வழங்கி தக்க நீதி நல்கிடுமாறு மாண்பமை இந்நீதிமன்றத்தை மனுதாரர் வணங்கி வேண்டுகிறார்.

....................த்தில் .................... தேதியில் கையொப்பமிடப்பட்டது.

(ஒப்பம்) ........................ (ஒப்பம்) ........................
மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் மனுதாரரின் வழக்குரைஞர்

1. இம்மனுவை 01/07/2024 முதல் பாரதிய நாக்ரிக சுரக்சா சன்ஹிதா, 2023–இன் பிரிவு 228–இன் கீழ் தாக்கல் செய்தல் வேண்டும்.